Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srnskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 20 (19.08.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 319

## சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறையில், கடந்த சனிக்கிழமை இரவு, முஸ்லிம்கள் இருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான, உழவு இயந்திர சாரதி எ.இப்ராலெவ்வை (வயது 40), விவசாயியான இரண்டு பிள்ளைகளின் தந்தை கே.எஸ்.இஸ்மாயில் ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் சேனவட்ட என்ற இடத்திலுள்ள தமது வயல் நிலங்களைப் பார்வையிட்டுவிட்டு, மோட்டார் சைக்கிளில் திரும்பிவரும்போது, இடைமறிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை - திருகோணமலை மூதூர் பகுதியில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பதற்றம் நீங்கமுன்னர், அம்பாறையில் மேலும் இருவர் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் உடல்கள் - நேற்றுக்காலை வயல்வெளி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டன.

இவர்கள், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த அன்வர் இஸ்மாயிலின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சூட்டுச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போதிலும்,

இக்குற்றச்சாட்டை, விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலன் நிராகரித்துள்ளார்.

## சம்மாந்துறையில் பதற்றம்; ஹர்த்தாலுக்கும் அழைப்பு!

(அம்பாறை)

சம்மாந்துறையில், முஸ்லிம்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை யடுத்து அங்கு பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.


கடந்த சனியன்று இரவு 'இனந் தெரியாதோரால் முஸ்லிம்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்ததும் வர்த்தக நிலையங்கள் உடனடியாகப் பூட்டப்பட்டதுடன், பெரும் பரபரப்பும் பதற்றமுமான சூழலும் காணப்பட்டது.

இதேவேளை, இந்தச் சம்பவத்திற்கு முழு அளவில் எதிர்ப்புத் தெரிவித்து, இன்று அம்பாறையில் பூரண கதவடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதற்றமான சூழலை அடுத்து, நெல் அறுவடைக்காக வெளியிடங்களிலிருந்து, அம்பாறை வந்திருந்த தமிழர்கள், உடனடியாகவே அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப கிட்டடியில பலப்பரீட்சை நடக்கும் போல...!

# எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் ரத்து; மாகாணசபை தேர்தலுக்கு திட்டம்!

## ஜனாதிபதி சந்திரிகா அதிரடி நடவடிக்கை



(கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்களை உடனடியாக ரத்துச்செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.**

**பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னோடியாக- அடுத்தடுத்த மாதங்களில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாலேயே, ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.**

தேர்தல் முறையை மாற்றியமைப்பது தொடர்பான ஆலோசனைகளைப் பெறும்பொருட்டு - தென்னாபிரிக்கா, கனடா, ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு விஜயம்செய்ய, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டிருந்தனர்.

அவர்களின் வெளிநாடுகளுக்கான பயணத்தைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாள் காவலரணிலிருந்த இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு!

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் முன்னரங்கக் காவலரணில், கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

எழுதுமட்டுவாள் வடக்கில் நிலைகொண்டுள்ள 55 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ஆராச்சிக்கே சுசில் குமார என்ற சிப்பாயே, தலையில் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இந்தப் பகுதியிலுள்ள முன்னணிக் காவலரணில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இவர், மறுநாள் காலை சடலமாக பொலிஸாரினால் மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிவான், சடலத்தை கொழும்புக்கு அனுப்பி, பிரேதபரிசோதனையை மேற்கொண்டு, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

# முஸ்லிம் மக்களின் உரிமைகள் ஒருபோதும் மறுக்கப்படமாட்டாது!

## மட்டு. - அம்பாறை அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன்

(அம்பாறை)

சம்மாந்துறைப் படுகொலைகளுக்கும் எமக்கும் எந்தவித தொடர்புமில்லை. முஸ்லிம் மக்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடன் நெருக்கமாகப் பழகி, அவர்களுக்குரிய உரிமைகள், அவர்களின் சுதந்திரம் என்றுமே மறுக்கப்படாத நிலையில- நாங்கள் எங்கள் அரசியல் பணியைச் செய்யவேண்டுமென்று, தமிழீழ தேசியத்தலைவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

- இவ்வாறு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரையில், இங்கு வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒரு குடும்பமாக, சகோதரத்துவமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அடிமட்ட மக்களைப் பொறுத்தவரையில், எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாது இருக்கின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நோர்வே நாட்டின் பேராசிரியர்கள் செயலக அதிகாரிகளுடன் பேச்சு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் ஆறு பேர் அடங்கிய குழுவினர் - குடாநாட்டு நிலைமைகள் பற்றி யாழ். செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானபீட விரிவுரையாளரான - பேராசிரியர் கிறிஸ்டியன் றொக்கா தலைமையில் வந்த இக் குழுவினர், நேற்றுமாலை 3 மணியளவில் யாழ்.செயலகத்தில் வைத்து திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படை தளத்துக்கு!

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக் கடலில் வைத்து, இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் - கடற்படையினரால் காரைநகர் கடற்படைத்தளத்துக்கு நேற்று மதியம் கொண்டுசெல்லப்பட்டனர்.

காரைநகரிலிருந்து நெடுந்தீவுக்கு வந்த கடற்படையினர் - கைதுசெய்யப்பட்ட 60 இந்திய மீனவர்களையும், 14 இழுவைப் படகுகளையும், தம்முடன் கொண்டுசென்றுள்ளதாகவும், இழுவைப்படகு ஓட்டிகள் 15 பேரையும், ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்ததாகவும், ஏனைய மீனவர்களை காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்துவைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

மீனவர்களின் இழுவைப்படகு ஒன்று பழுதடைந்த நிலையில், நெடுந்தீவுக் கடற்கரையில் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் குழுவினர் இன்று பாரிஸ் நகருக்கு பயணம்!

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா அம்மான் ஆகியோர் அடங்கிய குழுவினர், இன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்வைத்த இடைக்கால சபை வரைபினை, சட்டநிபுணர்களுடன் ஆராய்ந்து, தமது தரப்பு யோசனைகளை முன்வைக்கும் கலந்துரையாடலைப் புலிகள் பாரிஸில் நடத்தவுள்ளனர்.

இதில் கலந்துகொள்வதற்காகவே புலிகளின் பிரதிநிதிகள் குழு, இன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# பல்கலைக்கழகம் செல்லாதோருக்கு 'இசற்' ஸ்கோர் புள்ளிகள் வழங்கப்படும்!

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்துக்குச் செல்லாதோர், அவர்கள் கேட்டுக்கொண்டால் 'இசற்' ஸ்கோர் புள்ளிகள் வழங்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்துக்கு செல்வதற்கான புள்ளிகள் எடுக்காதோருக்கு, சற் ஸ்கோர் புள்ளிகள் வழங்கப்படுவதில்லை. அவர்கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக்கு அப்புள்ளி வழங்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் இப்போது அறிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களில் 'இசற்' ஸ்கோர் புள்ளிகள் கோரப்படுவதால், பலர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு முறையிட்டபோதே, பல்கலைக் கழகம் செல்லாதோருக்கும் 'இசற்' ஸ்கோர் புள்ளிகள் வழங்குவதென பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# இந்த ஆண்டு இலங்கையின் ஏற்றுமதி 366 மில்லியன் டொலரால் அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி இவ்வாண்டு 366 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டை விட, இவ்வாண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதிக்குள்ளும் ஏற்றுமதி வருமானம் 366 மில்லியன் அமெரிக்க டொலர்களினால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலைகளினாலேயே பொருளாதாரத்தில் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இறக்குமதித்துறையின் வருமானம் சொற்பஅளவே அதிகரித்துள்ளதாகவும் உல்லாசப் பிரயாணம், துறைமுக சேவைகள் மூலம் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மின்னல் தாக்கியதில் இரு பொலிஸார் காயம்

(வவுனியா)

மின்னல் தாக்கியதில் - இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டனர். மன்னார் வீதி, மடு றோட்டுக்குச் சமீபமாகக் கடமையிருந்த பொலிஸார் மீது மின்னல் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நூல் வெளியீட்டு விழா

கலாநிதி வி.நித்தியானந்தம் எழுதிய "இலங்கையின் பொருளாதார வரலாறு வடக்குக் கிழக்குப் பரிமாணம்" எனும் நூலின் வெளியீட்டு விழா, நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இளம் பொருளியலாளர் மன்றத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதமவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

## நிவாரண முத்திரை விநியோகம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இலவச நிவாரணம் பெறுவோருக்கான நிவாரண முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருவதுடன், உடனடியாகவே பல.நோ.கூ.சங்கக் கிளைகள் மூலம் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாக நிவாரணம் வழங்கப்படாமையினால், மக்கள பெரும் கஷ்டங்களை அனுபவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)


ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினவெளியீடு

விஜயகாந், கிரண் நடித்த

தென்னவன்



காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30



நிறஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், கிரண் நடித்த

பரசுராம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

BLUE STREAK

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)


## பிற்போடப்பட்டுள்ளது

19.08.2003 இன்று நடைபெறவிருந்த யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்மன்ற கடலோசை - 04 வெளியீட்டு நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, தவிர்க்க முடியாத காரணத்தினால் 02.09.2003 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

செயலாளர் ( 4 ஆம் அணி)

(455)

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது ஈழநாடு — தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ் — நடாத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
மூன்றாவது பரிசு - ரூபா 1,000

### நிபந்தனைகள்

- ✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- ✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003


ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம் குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்

இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 2223922 2225107

# அமைச்சர், எம்.பியை கைதுசெய்ய பொலிஸ்மா அதிபர் திடீர் உத்தரவு!

நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் எச்.ஜி.பி. நெல்சன், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக பண்டார தென்னக்கோன் ஆகிய இருவரையும் கைதுசெய்யுமாறு பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் நெல்சன் - அவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையத்தில் கடமையாற்றும் ஊழியரைத் திடீரென இடைநிறுத்தியுள்ளதுடன், அவருக்கு வழங்கவேண்டிய நஷ்டஈட்டினையும் வழங்க மறுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது - நீதிமன்றில் ஆஜராகும்படி அமைச்சர் நெல்சனுக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இவர் நீதிமன்றத்தில ஆஜராகாததையடுத்து, நீதிமன்றம் இவருக்குப் பிடியாணை பிறப்பித்திருந்த போதும், பொலிஸார் இவரைக் கைதுசெய்யவில்லை.

இதேவேளைபொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக பண்டார தென்னக்கோன் மீது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தென்னக்கோன் - நீதிமன்றில் ஆஜராகாததையடுத்து, நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தும் பொலிஸார் இவரைக் கைதுசெய்யவில்லை.

இந்த இருவரையும் கைது செய்வதில், பொலிஸார் - நாடாளுமன்ற சபாநாயகரின் அனுமதி பெறவேண்டியிருந்ததால் கைது செய்யவில்லை. மேற்படி இருவரையும் கைதுசெய்யுமாறு, நீதிமன்று - சட்டமா அதிபர் ஊடாக பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து பொலிஸ்மா அதிபர்- நீதிமன்ற கட்டளையின்படி இருவரையும் கைது செய்யுமாறு சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## மூதூரில் கடத்திச் செல்லப்பட்ட தந்தையும், மகனும் விடுதலை!

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் பகுதிக் கடலில், இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட தந்தையும், மகனும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

மூதூர் கடலில் தாம் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இனந்தெரியாத சிலர் வந்து, தமது கண்களைக் கட்டி, இழுத்துக்கொண்டு சென்று, தம்மைத் தாக்கியபின் விடுதலை செய்ததாகத் தெரிவித்தனர்.

இவர்களது உடம்பில் அடிகாயங்கள் காணப்பட்டதையடுத்து, இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## வடக்கு - கிழக்கு கிராமப் புறங்களில் அடுத்த வருடத்திற்குள் மின்விநியோகம்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



அடுத்த ஒரு வருட காலப்பகுதியில் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள கிராமப்புறங்களுக்கு மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுவிடும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு சமாதானச் சூழல் நிலவும் இக்காலப் பகுதியில், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் வடக்கு- கிழக்கில் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாகவும் -

பாதை புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகள் என்பவற்றை உடனடியாக முன்னெடுக்கவும், அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

## பேச்சுக்களில் கலந்துகொள்ள வன்னியிலிருந்து அழைப்பில்லை

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுமாறு, தமக்கு எந்தவிதமான அழைப்பும் வன்னியிலிருந்து கிடைக்கவில்லை என, தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவ்வாறான ஒரு அழைப்பு தமக்குக் கிடைத்தால், தாம் அந்த அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிளால் மோதி பெண்ணைக்கொன்ற கிரிக்கெட் வீரர்

### நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி

இலங்கை கிரிக்கெட் அணிவீரர் கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி - பெண்ணொருவரை மோட்டார் சைக்கிளால் மோதிக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை இரவு விருந்து ஒன்றில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது, கிம்புல்கொட சந்தியில் இவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் - தாய் ஒருவரையும், அவரது மகனையும் மோதியது.

இந்த விபத்தில் - தாய் அந்த இடத்திலேயே பலியானார். மகன் படுகாயமடைந்தார். இது தொடர்பாக கைது செய்யப்பட்ட கிரிக்கெட் வீரரை 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

## முஸ்லிம் இளைஞர்கள் கொலை; விசாரணைக்குழு திருமலைக்கு!

அண்மையில், முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்த, பொலிஸ்மா அதிபர் விசாரணை குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் - இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

உப்புவெளிப் பிரதேசத்தில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக, விசாரணைகளை மேற்கொள்ள என கிளைமன் சில்வா தலைமையிலான குழு ஒன்றினைப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா அனுப்பிவைத்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட மேற்படி குழுவின் அறிக்கை விரைவில் பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்படும்.

### மாகாண மட்ட ஆங்கில தின போட்டிகள்

வட-கிழக்கு மாகாணரீதியாக நடத்தப்படும் ஆங்கில தின எழுத்தாக்கல் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

நீண்டகாலத்தின் பின் யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற மாகாண மட்டப் போட்டிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## அரசியல் பழிவாங்கல்கள் அதிகரித்துச் செல்கின்றது

### சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜேரத்தின

(கொழும்பு)

அரசியல்ரீதியான பழிவாங்கல்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்து இருப்பதாக, சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.எஸ். விஜேரத்தின குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியல்வாதிகள் மாற்று அரசியல் கட்சிகளுடன் இணைந்து, அரசியல் பழிவாங்கலைச் செய்வதாகவும். இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் பொலிஸார் இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு ஒன்றினை அமைத்து, இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

## புதிதாகச் சேர்க்கப்படும் படையினர்; கொமாண்டோ அணியில் இணைப்பு!

(கொழும்பு)

தற்போது இடம்பெற்றுவரும் இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில், புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படும் படையினரில் ஒரு தொகுதியினர் - இராணுவத்தின் கொமாண்டோப் படைப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நான்காயிரம் படையினரை ஆட்சேர்ப்பதற்கான ஆட்திரட்டல் நடவடிக்கை - நேற்று ஆரம்பமானது. அடுத்த மாதம் 19 ஆம் திகதிவரை நடைபெறும் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில், புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் படையினரில் ஒரு தொகுதியினருக்கு, சிறப்புக் கொமாண்டோ பயிற்சி வழங்கப்பட்டு, கொமாண்டோப் படைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கு நான்கு மாத கால அடிப்படைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அத்துடன், புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள ஒரு தொகுதிப் படையினர் - பங்களாதேஷில் பயிற்சிபெற அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.நா.சபையில் இலங்கைப் படை; ஆராய அதிகாரிகள் குழு விஜயம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சமாதானப் படைகளுடன் இலங்கை இராணுவத்தினரையும் இணைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

இதற்காக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரி ஒருவர் ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

சமாதான காலத்தில் படையினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும், சமாதானப் படையினரின் செயற்பாடுகள் பற்றிய பயிற்சிகளைப் பெறுவதற்காகவுமே அவர் அங்கு சென்றுள்ளார்.

இவர், அங்கு பெற்ற பயிற்சிகளை, நாடு திரும்பியதும் படையினருக்கு வழங்குவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## ஏ-9 வீதி புனரமைப்பு பணி இடைநிறுத்தப்படமாட்டாது

### திட்டப் பணிப்பாளர் மெய்கண்டான்

வடபகுதியில் பெய்துவரும் பருவமழை காரணமாக, ஏ-9 வீதியின் திருத்தப்பணிகள் இடைநிறுத்தப்படாதென, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப்பணிப்பாளர் மெய்கண்டான் தெரிவித்தார்.

கணிசமானளவு திருத்தபணிகள் நிறைவுபெற்றுவிட்டதாகவும், மீதி திருத்த வேலைகளும் இவ்வாண்டுக்குள் நிறைவுபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஏ-9 வீதிப் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி அரசசேவை ஆணைக்குழு; செயற்பாடுகள் அரசால் விஸ்தரிப்பு!

### கட்சிகளுடன் பேச்சுநடத்தத் தீர்மானம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமமாக, உள்ளூராட்சி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு, அரசியல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக - அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளதாக, சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவை ஆணைக்குழு பொதுமக்களுக்கு எவ்வாறு சேவை செய்கின்றதோ, அதேபோன்று உள்ளூராட்சி அரசாங்க சேவை ஆணைக்குழு - மக்களுக்குச் சேவைகள் புரிவதற்கு இடமளிக்குமுகமாகவே இத்திருத்தங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக அமைச்சரவையிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது எனத் தெரியவருகிறது.

## டிசம்பரில் மாகாணசபை தேர்தல் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்!

மாகாணசபைத் தேர்தல்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்துவதற்குத் தாம் தீர்மானித்துள்ளதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கேற்றவாறு, பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பலப்படுத்துமாறு அவர்களிடம் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இப்போது நடைமுறையிலிருக்கும் 7 மாகாணசபைகளில் ஆறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழும், மத்திய மாகாணசபை மாத்திரம் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழும் செயற்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியின் தீர்மானத்தின்படி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழுள்ள மாகாணசபைகளை முதலில் கலைப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பு, ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வது சம்பந்தமான நடவடிக்கைகளை, பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் என்று தெரியவருகின்றது.



# படையினர் வசமுள்ள வீடுகளைப்பெற நீதிமன்றத்தை நாடவேண்டியிருக்கும்!

## பிரதமருக்கு மந்துவில் கிழக்கு மக்கள் கடிதம்

மந்துவில் கிழக்கில் மக்களின் குடியிருப்புக்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி, அங்கு தம்மை மீளக்குடியேற அனுமதிக்குமாறும், இதற்கு இன்று உரிய பதிலைத் தராவிட்டால், வீடுகளைத் திரும்பப்பெற நீதிமன்றத்தை நாடப்போவதாகவும், அப்பகுதி மக்கள்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இரண்டாயிரமாம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட எமது வீடுகளை, கார்த்திகை 2002 ஆம் ஆண்டு தொடக்கம் திருப்பித் தருவதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரை எமக்கு - எமது வீடுகள் தரப்படவில்லை. நாம் எவ்வளவு காலத்திற்கு இரவல் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கியிருப்பது. இவ்வாறு நிரந்தர மில்லாத இடங்களில் இருந்துகொண்டு, எமது பிள்ளைகளின் கல்வி மற்றும் இதர வசதிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே, உயர் பாதுகாப்பு வலயத்தில் இல்லாத எமது இடங்களை, எமக்கு மீளத்தருமாறும், அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தென்மராட்சி தெற்கில்

## கண்ணிவெடி அகற்றுவது தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு மறவன்புலோவில் இராணுவத்தினரால் விவசாயச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில், அப்பகுதி விவசாயிகளுக்கு மீள் நெற்செய்கை, மிதிவெடியகற்றல் சம்பந்தமான அறிவுறுத்தல் விளக்கக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இன்று மாலை 2.30 மணிக்குக் கைதடி கமநலநிலைய மண்டபத்தில் கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.தவராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பட்டினிக் கெதிரான இயக்கம், 'த ஹலோ ட்ரஸ்ற்' மற்றும் விவசாயிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கடும் மழையால் ஆலமரம் சாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையினால், யாழ் - கண்டி வீதியில் புங்கன்குள சந்திக்கருமையிலிருந்த - பழமை வாய்ந்த ஆலமரம் வேரோடு சாய்துள்ளது.

இதனால், நேற்றுமுன்தினம் காலையிலிருந்து சிலமணிநேரங்கள் - கண்டி வீதியினூடான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. வாகனங்கள், பொதுமக்கள் மாற்றுவதியைப் பயனபடுத்திய பின்னர், மதியமளவிலேயே அவ்வாலமரம் வீதியை விட்டு அகற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# நாவலர் மண்டபத்தில் நடந்த ஹர்த்தால் நினைவு நாள்!

அரசாங்கத்தின்- மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக 1953 ஆம் ஆண்டு மக்கள் - தேசமெங்கும் கிளர்ந்து எழுந்த ஹர்த்தாலின் 50 ஆவது வருட நினைவுதினம் - யாழ்ப்பாண சமூக விழிப்புணர்வு மன்றத்தின் ஏற்பாட்டில், நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக விழிப்புணர்வு மன்றத் தலைவர் இ.தவராசா தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விரோத நடவடிக்கைகளை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மக்களுடன் இணைந்து மக்கள் போராட்டங்களை நடாத்தியிருந்தது. இதுகுறித்தும் மற்றும் கடந்தகால ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கைகள் பற்றியும் இக்கூட்டத்தில் எடுத்துக்கூறப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் எஸ்.ஆர்.எட்வேட், இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம், ஒய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.இராசையா, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் சொ.சிவபாலன், ஏ.சி.ஜோர்ஜ், கூட்டுறவு ஊழியர்சங்க உறுப்பினர் எஸ். கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றினர்.

# உலகவங்கி அதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்

உலகவங்கியின் உயரதிகாரிகள் குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, நியாப் திட்டத்தின் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டனர்.

உலக வங்கியின் உயரதிகாரி நிஹால் பெர்னாண்டோ, உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி, கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர், உருத்திரபுரம் - சிவநகரில் நியாப் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குளவேலைத்திட்டத்தினைப் பார்வையிட்டனர்.

அதனையடுத்து, மேற்படி பகுதிகளில் நியாப் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட மூன்று கிணறுகளையும் பார்வையிட்டதுடன், மேற்படி திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மண்டபத்தினையும் பார்வையிட்டனர்.

தற்போது சிவநகர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஜீவனோபாயத்திட்டம் தொடர்பாக, சிவநகர் கிராம மகளிர் சங்கப் பிரதிநிதிகளுடன் இவர்கள் கலந்துரையாடிச் சென்றனர். (17)

## கட்டுத்துவக்கு வெடித்து சிறுவன் காயம்

(கிளிநொச்சி)

பாண்டியன்குளம் பிரதேசத்தில் கட்டுத்துவக்கு ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

கடந்த சனிக்கிழமை காலை வீட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்துப் பரீட்சித்துப்பார்த்தவேளை, துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சோ.தியாகுலம் (வயது12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

இவர் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (17)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மலேரியா தடுப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில், மலேரியா நோய்க்காவியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களின் மலேரியா தடை இயக்கப் பிராந்திய வைத்திய அதிகாரியின் பணிப்பிற்கமைய, இப்பகுதிகளில் மலேரியா நோய்க்காவியான நுளம்பினைக் கட்டுப்படுத்த- சல்பத்தியோன விசிறும் நடவடிக்கையே ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொதுமண்டபங்கள் போன்றவறறுக்கு சல்பத்தியோன விசிறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் இப்பகுதிகளில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்திருப்பதோடு, பலர் மலேரியா நோய்த்தாக்கத்திற்கும் உள்ளாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (108)

# நல்லைக் கந்தனின் உற்சவம் இணையம் ஊடாக உலகெங்கும்!

(யாழ்ப்பாணம்)

இணையத்தளத்தின் ஊடாக நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ கால நிகழ்வுகள் - உலகம் எங்கும் எதிரொலிக்கின்றது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் நன்மைகருதி, உலகத் தமிழர் வானொலி நிலையத்தினர் - நல்லூர்க் கந்தன் உற்சவ நிகழ்வுகளைக் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் மாலை நிகழ்வுகளை நேரடியாக இணையத்தளத்தின் ஊடாக வெளியிடப்பட்டுவருகிறது.

யாழ். குடாநாட்டிலுள்ள பாரம்பரிய கலைஞர்கள், அறிவு சார் விற்பன்னர்களினது கலந்துரையாடல்கள், நேர்காணல் போன்ற நிகழ்வுகளையும் மாலை 6.30 தொடக்கம் 7.00 மணிவரை **www. worldtamilar.com** என்ற இணைய முகவரியின் ஊடாக வெளியிடப்படுகிறது.

## துப்பாக்கி வைத்திருந்த இருவர் கைது

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றையும், சிறியரகத் துப்பாக்கி ஒன்றையும் - நிட்டம்புவ பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கியை வைத்திருந்ததாகக் கருதப்படும் இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## வாழ்க வளமுடன்

**HAPPY BIRTHDAY**

### முதலாவது அகவையில்




பெயர் : அ.பானுஜா
முகவரி : இரத்தின இல்லம் சித்தன்கேணி.




பெயர் : வ.பூமிகா
முகவரி : வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

### மூன்றாவது அகவையில்




பெயர் : செ.சிந்துஜன்
முகவரி : சிந்துமஹால், மாவிசந்தி.

### நான்காவது அகவையில்



பெயர் : சி.லக்ஸ்ஷனா
முகவரி : குமுழடி, அல்வாய்.




பெயர் : மே.அபிப்பிரியன்
முகவரி : மாரியம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு.



பெயர் : சி.நிதிஜா
முகவரி : முருகன் கோவிலடி, நெல்லியடி.

### எட்டாவது அகவையில்



பெயர் : உ.சோபிகா
முகவரி : கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# 5300 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனின் சடலம்

**1991** ஆம் ஆண்டு அல்ப் பனிப்பாறைகள் உருகியபோது, புராதன காலத்து மனிதனின் சடலம் ஒன்று வெளிப்பட்டது. இச்சடலம் அவ்விடத்திற்குச் சுற்றுலா சென்ற ஒமெர்சி என்பவரால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இப்புராதன காலத்து மனிதரின் நன்கு பாதுகாக்கப்பட்ட உடலை, அவுஸ்திரேலிய மரபணுச் சோதனை நிலையத்தில் - ஆராய்ச்சியாளர் "ஜ ஆண பின்ட்லே" என்பவர் ஆராய்ந்து, பல உண்மைகளைக் கண்டறிந்தார்.



முதலில் அம்மனிதனின் மரணத்திற்குக் குளிரும், பட்டினியும் காரணம் என ஊகிக்கப்பட்டது. ஆனால், அம் மனித உடலை நன்கு பரி சோதிக்கப்பட்டபோது, பல உண்மைகளை அறிந்து கொள்ள முடிந்தது. இவர் 5300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்தார் என்பதும், முற்பட்டவேளையில், மரண எதிரியுடன் ஏற்பட்ட கைகலப்பில் தப்பியோடுவதற்கு மடைந்ததாகவும் அறிந்து கொண்டார். இவரது சடலத்தின் அருகில் காணப்பட்ட கத்தி, கோடரி ஆகியவற்றில் படிந்திருந்த இரத்தக்கறைகளை மரபணுப் பரிசோதனை செய்தபோது, வேறு சிலரது இரத்தத்திற்கான ஆதாரங்களை அறியமுடிந்தது. மேலும் ஆராய்ந்தபோது, முதுகுப் பக்கத்தில் அம்பு ஒன்றின் முறிந்த பகுதியையும் காணமுடிந்தது. தப்பித்துக் கொள்வதற்காக ஓடும்போது ஏற்பட்ட காயங்கள் என அறியப்பட்டது. இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டபோது, கையில் கத்தி ஒன்று வைத்திருந்தது, எதிரியுடன் போராடியதை நிரூபித்தது.

கடந்த 25 ஆண்டுகளில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாக இது கருதப்படுகிறது.

இந்த மனிதனின் உடலுக்கு அவுஸ்திரேலியாவும், இத்தாலியும் உரிமைகோரி இருந்தன. இன்று இந்த உடல் பொல்சானோ என்ற இடத்தில், புதைபொருள்கள் காட்சியகத்தில் குளிர் அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மனிதன் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்று நம்பப்படுகிறது.




# உயர் வெப்ப நிலையிலும் வாழும் நுண்ணங்கிகள்

**ஸ்**பெயின் 121 என அழைக்கப்படும் நுண்ணங்கிகள் (**MICROBE**) - 121C வெப்பநிலையிலும் உயிர்வாழும் ஆற்றல் கொண்டவை என, அமெரிக்க விஞ்ஞானிகள் அறிந்துள்ளார்கள். ஒரு கலத்தை (**CELL**) கொண்ட இந்த உயிரினம் - பசுபிக் சமுத்திரத்தின் அடிப்பாகத்தில் வெந்நீர் ஊற்றிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. இந்த வெந்நீர் ஊற்றுக்கள் $121^{0}$ **C** வெப்பத்தைக் கொண்ட கொதிநீரைக் கடலின் அடிப்பாகத்தில் வெளியேற்றுகின்றது. இந்தக் கொதிநீரில் ஸ்பெயின் 121 எனப்படும் நுண்ணங்கி உயிர்வாழ்வதை அவதானித்தார்கள். மருத்துவ கருவிகளைக் கிருமி அகற்றுவதற்குச் சூடாக்கும் ஓடோகிலோவிங் (**Auto Claving**) முறையில் சூடாக்கியும், ஸ்ரெயின் 121 அழியாமல் இருப்பதை அவதானித்தார்கள்.



நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமி மிகவும் சூடாக இருந்த, காலத்திலிருந்த நுண்ணங்கிகளை ஒத்ததென அமெரிக்க விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்தனர்.



செவ்வாய்க்கிரகமும் கடந்த காலத்தில் மிகவும் சூடாக இருந்ததாக அறியப்பட்டுள்ளது.

இதனால், அந்தக் கிரகங்களிலும் இதுபோன்ற நுண்ணங்கிகள் இருந்திருக்கலாம் எனக் கருதமுடியும் என, அந்த விஞ்ஞானிகள் தெரிவித்தார்கள்.

# இந்தியாவிலும் டைனோசர் எச்சங்கள்


**65** மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் எச்சங்களை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

குஜராத்தின் தென்பகுதியில் அமைந்த நர்மதா ஆற்றின் கரையோரப் பகுதிகளில் இவற்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.



ஆராய்ச்சியாளரும், புதைபொருள் ஆய்வில் விற்பன்னருமான போல் செரேு நஷனல் ஜியாகிரபி குழுவுடன் இவற்றைக் கண்டு பிடித்தார்.

இந்த விலங்கின் படிமங்கள் (**Fossile**) 30 அடி நீளம் கொண்டதாகவும் அமைந்திருந்தன.



இருபது ஆண்டுகளுக்கு முன் - இந்திய விஞ்ஞானிகளினால் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் இருந்து இது 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதென கண்டறியப்பட்டுள்ளது. எல்லா எலும்புகளுடனும் கிடைத்த தலைப்பாகத்தையும் இணைத்துப் பார்த்தபொழுது 'மடகாஸ்கார்' என்னும் இடத்தில் கண்டுபிடித்த டைனோசருடன் இது ஒற்றுமையாக இருந்தது.

# ஏரியில் அருகிவரும் மீன்கள்

**த**ன்சானியா, சம்பியா, கொங்கோ ஆகிய நாடுகளைச் சார்ந்து, "தங்கன்னிகா" ஏரி அமைந்துள்ளது. இந்த நாடுகளில் வாழும் மக்களின் உணவுத் தேவைகளை, இந்த ஏரியில் பிடிக்கப்படும் மீன்வகைகள் பூர்த்தி செய்து வந்தன. திடீரென இங்கு மீன்வளம் குறையத்தொடங்கியது. சூழல் வெப்பநிலையில் ஏற்பட்ட மாற்றம்தான் மீன்கள் அரிதாகிப்போனதற்குக் காரணமென ஆய்வுகளில் தெரியவந்தது.




நியூயோர்க்கைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கதறின் ஓ ரெயிலி என்பவரின் தலைமையிலான ஒரு குழு, இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்டது. "தங்கன்னிகா" உலகின் இரண்டாவது பெரிய ஏரியாகும். வருடமொன்றிற்கு இரண்டு லட்சம் தொன் மீன்பிடிக்கக் கூடியதாக இருந்தது. இந்த ஏரியை அண்டிய நாடுகளின் - உணவும், வருமானமும் இதிலிருந்து கிடைத்து வந்தது.

"சாடின்" எனப்படும் ரின்னில் அடைக்கும் மீன் - 1970 ஆம் ஆண்டிலிருந்து 50 வீதமாகக் குறையத் தொடங்கியது. சூழல் வெப்பநிலையில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணம் என, இந்த ஆய்வில் அறிந்துகொண்டார்கள். வெப்பநிலை அதிகரிப்பினால், கடலின் மேல் மட்டத்து வெப்பம் கூடியும், காற்றோட்டம் குறைந்தும் காணப்பட்டது. இந்த வெப்பநிலை மாற்றம் மீன்களின் முக்கிய உணவான "அல்கா" எனப்படும் சிறிய தாவரங்களில் 20 சதவீதமாகக் குறைந்துவிட்டது. இதனால், "சாடின்" போன்ற மீன் இனங்களின் பெருக்கம் குறைந்து போயிருந்ததையும் அவதானித்தார்கள். இன்னும் 80 ஆண்டுகளில், இந்த ஏரியில் மீன்கள் மிகவும் அரிதாகக் காணப்படும் நிலை ஏற்படலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

# அதிக புரத உணவு ஆரோக்கியமானதல்ல

**அ**திக புரதத்தைக் கொண்டுள்ள உணவுகள், உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல என்ற கருத்தை, சத்துணவு தொடர்பான அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள். சத்துணவு உடலுக்கு நன்மை அளிப்பதை விட, உடலுக்குக் கூடுதலான தீமைகளை விளைவிப்பதாக அறியப்படுகிறது. உடல் பருமனைக் குறைத்துக் கொள்வதற்காக உணவைக்கட்டுப்படுத்துதல், உடலுக்குத் தேவையான விற்றமின்களையும், கனிப்பொருள், நார்ச்சத்து ஆகியவற்றின் அளவையும் குறைத்துவிடுகின்றன. இதனால், நோய்க்கு வழிகோலுவதாக இந்த அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

புரதத்தைக் கொண்ட உணவுகளில் உயர்ந்தளவில் கொழுப்பும் காணப்படுகிறது. மிருகங்களிலிருந்து கிடைக்கும் உணவுப்பொருட்கள், கூடியளவில் கொழுப்பைக் கொண்டிருக்கிறது. இதனால், உடலில் கொலஸ்ரோல் (**Cholesterol**) அளவை அதிகரிக்கச்



செய்கின்றது. இது இருதய, நீரிழிவு, பாரிசவாதம் போன்ற நோய்களும் மற்றும் சில வகையான புற்றுநோய்களும் ஏற்பட வழிசமைக்கின்றது.

இரத்த அழுத்தத்தைக் குறைத்துக்கொள்வதற்கு - உணவில் கூடியளவில் பழங்கள், மரக்கறிவகைகள், கொழுப்பற்ற பால்பண்ணைப் பொருட்கள். தானிய வகைகளை அதிகளவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

நிறைகுறைத்துக் கொள்வதற்கு உணவைக் கட்டுப்படுத்துவதைவிட சத்துணவுகள் உட்கொள்வதும், கூடியளவில் உடலுக்குப் பயிற்சி கொடுப்பதும் சிறந்தாகும்.

உடல் ஆரோக்கியத்திற்குப் புரதஉணவு அவசியமாகும். ஆனாலும், சமவிகித உணவில் உடலுக்குத் தேவையான புரதங்கள் அடங்கியுள்ளன. கூடியளவில் புரதத்தை உட்கொள்வது ஈரல், சிறுநீரக நோய்களுக்கும் காரணியாகின்றது.

அதிகபுரதம் கொண்ட உணவுகள் உடலின் நிறையை விரைவில் குறைத்துவிடுகின்றது. இதன்மூலம் உடலின் நீரும் குறைந்துவிடுகின்றது.

நீர் குறையும்போது, கிளைக்கோசின் எனப்படும் சீனிச்சத்தும் குறைகின்றது. இதனால், மனச்சோர்வு உண்டாகின்றது.

## திரை விமர்சனம்

# காக்க காக்க



பயங்கரவாதிகளும், கிரிமினல்களும் நடமாடும் ஊர்களில் குறிப்பாக, மும்பை போன்ற நகரங்களில் 'என்கௌண்டர்' என்ற வார்த்தை மிகவும் பிரபலம். பொலிஸ்காரர்கள் ஒரு குறிப்பிட்ட ரவுடியைத் திட்டமிட்டுச் சுட்டுக் கொல்வது என்பதுதான் அதன் விரிவாக்கம். இந்த வார்த்தையும், இந்தக் காரியமும் இயக்குநர் கௌதமை மிகவும் ஈர்ந்திருக்கும் காரணத்தினால் - சூர்யா, ஹாரிஸ் ஜெயராஜ், ஆர்.டி.ராஜசேகர், ராஜீவன் போன்ற கூட்டணியோடு என்கௌண்டர் படத்தை இயககியுள்ளார். அன்புச்செல்வன் (சூர்யா) ஒரு விசேடமான ரவுடி. சமூக விரோதி - என்று கண்களில் யார்பட்டாலும், சுட்டுத்தள்ளி விடுவார். சொந்த பந்தம் யாருமில்லாத அன்புச்செல்வன் வாழ்க்கையில் - மாயா (ஜோதிகா) காதலியாகக் குறுக்கிட, உணர்வுச் சிக்கல்கள் வருகின்றன.

இதன் இறுதியாக நண்பர்கள் இறந்து, காதலி (மனைவி) இறந்து, தனியாக என்கௌண்டர் வேலையைத் தொடங்குகிறார் அன்புச்செல்வன்.

என்கௌண்டரின் சுவாரஸ்யமான விடயமே. அதற்கான திட்டமிடல்தான். துப்பாக்கிகளைத தூக்கிச் சுடுவதில்லை என்கிற அடிப்படையைத் தவறவிட்டதன் விளைவு - படம் முழுக்க வில்லன்களும், ஹீரோவும் ஒருவரை மாற்றி ஒருவர் துரத்துவதும், சுட்டுக் கொல்வதுமாகத் திரிகிறார்கள்.

சூர்யா அலட்டல் இல்லாமல் யதார்த்தமாக நடித்துள்ளார். ஜோதிகாவுக்குப் பாடசாலை ஆசிரியைப் பாத்திரம். கண்களில் குறும்பு, கொப்பளிக்க வளைய வருகிறார். காதல் காட்சிகளில் கவிதை, அர்த்தமான வசனங்கள் என்று அமர்க்களமான ஜோடி. சூர்யாவின் நண்பர்களில் ஒருவராக வரும் டானியலின் நடிப்புப் பாராட்டுக்குரியது.

அதேபோல், படத்தில் கவனிக்கப்படவேண்டிய இன்னொரு நபர் வில்லன் ஜீவன். படத்தில் சொல்லப்படும் முக்கியமான கருத்து - மக்களைக் காப்பாற்றுவதற்காக ரவுடிகளையும், தீவிரவாதிகளையும் சுட்டுக் கொல்கிறார்கள்.

சமீபகாலமாகத் தமிழ் சினிமாவில் பொலிஸ்காரர்களை ஆராதித்துப்படம் எடுக்கும் போக்கு அதிகரித்து வருகிறது விவாதிக்கபடவேண்டிய விடயம்.

காக்க ... காக்க தமிழ் ரசிகர்கள் காக்க....!

# பாம்புகள் பற்றிய கட்டுக்கதைகள்

அதோ ஒரு பெண் - தலை நிறைய மல்லிகைப் பூ வைத்துக்கொண்டு, நடந்து போகிறாள். அந்தப் பூவின் வாசனைக்கு மயங்கி, அவள் பின்னாலேயே வழவழப்பான ஒரு நல்ல பாம்பு மெல்ல ஊர்ந்து செல்கிறது.

நீளமான அதன் உடல் - கடல் அலைபோல வளைந்தும், நெளிந்தும் செல்கிறது. அந்தப்பாம்பு - அவளை வசியம் செய்வதைப்போல், வைத்த கண் வாங்காமல் பார்க்கிறது. அப்போது, அதன் தலையில் இரத்தினக்கல்லைப் போன்ற ஏதோ ஒன்று ஜொலிக்கிறது. அவள் அதைப் பார்த்து மயங்கிய நேரத்தில், திடீரென்று பாம்பு தாவி அவள் கையில் தன் நச்சுப்பல்லைப் பதித்தது.



இது உண்மைக் கதையா அல்லது வெறும் கற்பனையா? இதைப் படித் ததும உங்கள் மனத்திரையில் ஓடும் காட்சிகளெல்லாம் சுத்தப்பொய். அவையெல்லாம் தவறான கருத்துக்களின் அடிப்படையிலானவை. அவற்றில் சிலவற்றைக் கவனியுங்கள்.

**1. மல்லிகை, சந்தனம், இன்னும் மற்ற வாசனைகள் பாம்புகளைக் கவர்ந்திழுக்கின்றன.**

இது தவறு. பூவின் வாசனை பூச்சிகளைக் கவர்கிறது. பூச்சிகள், தவளைகளைக் கவருகின்றன. தவளைகள், பாம்புகளைக் கவருகின்றன. பாம்புகளுக்கு மிகவும் பிடித்தமான உணவுகள் தவளைகள்தானே.

**2. பாம்புகள் தங்கள் உடலை உயர்த்தி மேலும் கீழுமாக அசைத்தே நகருகின்றன.**

தவறு. அவை பெரிய கற்கள் மீது நகரும்போது, பார்வைக்குத்தான் இவ்வாறு தோன்றுகிறது. நிலத்தில் வாழும் நல்ல பாம்புகளும், மற்றப் பாம்புகளும் பொதுவாகக் கோடு கிழித்தால்போல் நேராகத்தான் நகருகின்றன. அவை மண்புழுவைப்போல், அதாவது தங்கள் உடலின் முற்பகுதியை நீட்டி, அதற்குப் பின்பு பிற்பகுதியை முன்னோக்கி இழுக்கின்றன அல்லது தரையின் சொரசொரப்பைப் பயன்படுத்தி உடலை S வடிவில் வளைத்தும், நெளித்தும் நகர்கின்றன.

**3. சில பாம்புகளின் தலையில் விலையுயர்ந்த நாகரத்தினக் கல் இருக்கிறது.**

தவறு. இது ஒரு கட்டுக்கதை. அதைப்போலவே இந்தியாவில் பூர்வ காலங்களில் வாழ்ந்த புகழ்பெற்ற மனிதர்களை நல்ல பாம்புகள் காப்பாற்றி வந்தன என்பதும் கட்டுக்கதைதான்.

**4. நல்ல பாம்புகள் இரையை வசியம் செய்கின்றன.**

தவறு. பொதுவாகப் பயந்துபோயிருக்கும் ஒருபாம்பு, வைத்த கண் வாங்காமல் அதன் எதிரியைப் பார்க்கிறது. ஆகவே, பாம்பைப் பார்க்கும் ஒரு நபர் அது வசியம் செய்வதாக நினைக்கலாம். ஆனாலும், இரையைப் பிடிக்க இந்த முறையை அது உபயோகிப்பதில்லை.

**5. நல்ல பாம்புகள் அப்படியே தாவிவந்து இரையைத் தாக்குகின்றன.**

தவறு. இரையைத் தாக்கும்போது, பாம்பின் முற்பகுதி மட்டுமே இரையை நோக்கிச் செல்கிறது. அதன் உடலின் பெரும்பகுதி தரையில்தான் இருக்கிறது. அப்போதுதான் தரையை உறுதியாகப் பிடித்துக்கொள்ளமுடியும் அல்லவா? அது தாக்குவதற்குத் தயாராகும்போது, அதிகபட்சமாக அதன் உடலில் மூன்றில் ஒரு பகுதிதான் தரையிலிருந்து மேலெழும்பி நிற்கிறது.

**6. நல்ல பாம்புகள் உட்பட, எல்லாப் பாம்புகளின் தோலும் வழவழப்பாகவும், எப்போதுமே சில்லென்றும் இருக்கும்.**

தவறு. செதில்கள் நிறைந்த அவற்றின் தோல் காய்ந்தும், தொடுவதற்கு மிருதுவாகவும் இருக்கும். பாம்புகள் குளிர் இரத்த பிராணிகள். அதாவது, வெளியிலிருக்கும் சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு, அவற்றின் உடல் வெப்பநிலையும் மாறிக்கொள்ளும்.

**7. நல்ல பாம்புகளுக்கு காது கேட்காது.**

தவறு. இது அநேகரிடையே நிலவும் ஒரு தவறான கருத்தாகும். தரையில் ஏற்படும் அதிர்வுகளை அவற்றின் உடல்மூலம் கண்டறிவதனால் மட்டுமே பாம்புகள் கேட்கின்றன என, அவர்கள் நம்புகின்றனர். காற்றில் வரும் சத்தங்களைப் பாம்புகளால் கேட்கமுடியும் என்றும், பாம்பாட்டியின் இசைக்குகேற்றவாறு அவை ஆடுகின்றன என்றும், சமீப ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

# தங்கநாடு - மியன்மார்

ஆசிய அண்டை நாடுகளுடன் இயற்கை அரண்களாகத் திகழும் மலைத்தொடர்களுக்கு இடையே, அழகாகக் கொலுவீற்றிருக்கிறது இந்தத் "தங்க நாடு". தென்மேற்கில் வங்காள விரிகுடாவும், அந்தமான் கடலும் 2,000 கிலோமீற்றருக்கும் அதிக நீளமான அதன் கடற்கரையில் வந்து மோதுகின்றன. அதன் மேற்கே வங்காளதேசமும், இந்தியாவும், வடக்கே சீனாவும், கிழக்கே லாவோஸும், தாய்லாந்தும் உள்ளன. அது மடகாஸ்கரைவிட சற்றுப் பெரிதாகவும், வட அமெரிக்காவிலுள்ள டெக்ஸஸ் மாகாணத்தைவிட சிறிதாகவும் உள்ளது. அது எந்த நாடு? அதுதான் இன்றைய மியன்மார், அன்றைய பர்மா.

ஆரம்பத்தில் அதில் குடியேறியவர்கள் அதை தங்கநாடு என அழைத்தார்கள். மியன்மாரில் செல்வத்தை அள்ளித் தரும் அநேக இயற்கை வளங்கள் பல. அவையாவன- பெற்றோலியமும் இயற்கை வாயுவும், தாமிரம், தகரம், வெள்ளி, டங்ஸ்டன், இன்னும் மற்றக் கனிமப் பொருட்கள் மற்றும் நீலக்கற்கள், மரகதக்கற்கள், செந்நிறக்கற்கள், பச்சைமணிக்கல் போன்ற விலையுயர்ந்த கற்கள், இன்னுமுள்ள பொக்கிஷங்களுள் தேக்கு, ரோஸ்வுட், படௌக் போன்ற அரியமரங்கள் உள்ள வெப்பமண்டல மழைக் காடுகளும் அடங்கும். இந்த காடுகள் - குரங்குகள், புலிகள், கரடிகள், நீர் எருமைகள், யானைகள் போன்ற அநேக காட்டு விலங்குகளின் குடியிருப்பும் கூட. ஆனால், தங்க நாட்டின் தலைசிறந்த செல்வம் மணிமணியான அதன் மக்களே.

### மியன்மார் மக்கள்

பொதுவாகவே சாந்தமும் அமைதியுமிக்க மியன்மார் மக்கள் நன்னடத்தை மிக்கவர்களும், உபசரிக்கும் குணம் படைத்தவர்களும் ஆவார்கள். வரும் விருந்தாளிகளை மரியாதையோடும், கண்ணியத்தோடும் நடத்துபவர்கள். பொதுவாகப் பிள்ளைகள் - பெரியவர்களில் ஆண்களை 'அங்கிள்' என்றும், பெண்களை 'ஆன்ரி' என்றும் அழைக்கின்றனர்.



மியன்மாருக்கு விஜயம் செய்பவர்கள், பெரும்பாலும் வயதானவர்களின் வழவழப்பான முகத்தைக் குறித்துப் பாராட்டிப் பேசாமல் இருப்பதில்லை. இந்தத் தோலின் இளமைக்குக் காரணம் - தனகா மரத்திலிருந்து பெற்ற பிரபலமான, வெளிர் பொன்னிறமுள்ள முக ஒப்பனைப் பொருளான தனகாதான் என்கிறார்கள் பெண்கள். உறுதியான, தட்டையான கல்லில் துளி தண்ணீர் விட்டு இந்த மரத்துண்டை அரைத்து, மென்மையான பசையைப் பெண்கள் தயாரிக்கிறார்கள். அதைக் கலாரசனையோடு கள் தீட்டிக் கொள்வார்கள். எண்ணெய்ப் ஊட்டுவதுடன், இந்தத் தனாகா கடுமை வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் பாதுகா முகம் முழுவதும் அவர் பிசுபிசுப்பை நீக்கி, குளிர்ச்சியான, வெப்பமண்டல சூரிய வலனாகவும் விளங்குகிறது.

மியன்மாரிலுள்ள ஆண்கள், பெண்கள் இருவருமே பொதுவாக அணியும் உடை லோஞ்சி. இது சுமார் இரண்டு மீற்றர் நீளமுள்ள துணியின், இரண்டு ஓரங்களையும் இணைத்து எளிதில் தைக்கப்படுகிறது. ஒரு பெண் அதில் கால்களை நுழைத்து, பாவாடைபோல் மார்புக்குக் கீழே சுற்றிக்கொண்டு, அதன் ஒரு நுனியை இடுப்பில் செருக்கிக் கொள்கிறார். அடக்கமான, இறுக்கமற்ற இந்த லோஞ்சி வெப்பமண்டலத்திற்கு வெகு பொருத்தமான உடை.



மியன்மாரிலுள்ளவர்கள் படுதிறமைசாலிகள். பட்டு நெய்வதில் தேர்ச்சி பெற்றவர்கள். அணிகலன்களைச் செய்வதில் கைத்திறன் மிக்கவர்கள். மரச்செதுக்கு வேலைப்பாடுகளில் வல்லவர்கள். தேக்கு, படௌக் போன்ற மரங்களைக் கொண்டு மனதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் - மனிதர், புலி, குதிரை, நீர் எருமை, யானை போன்ற அழகான உருவங்களை உருவாக்குகின்றனர். மேசை அலங்காரபொருட்கள், அறை விரிக்கும் தடுப்புகள், நாற்காலிகள் போன்ற சாதாரணமான பொருட்களும், சிக்கலான கலைநயம்மிக்க செதுக்கு வேலைப்பாடுகளுடனும் மிளிர்கின்றன.

### மியன்மாரின் வரலாறு

மியன்மாரின் ஆரம்பகால வரலாறு தெளிவற்றிருக்கிறது. ஆனால், அண்டை அயல் நாடுகளிலிருந்து ஏராளமான இனப்பிரிவினர்கள் இங்கு வந்து குடியேறியதாகத் தோன்றுகிறது. பூர்வீகக் குடியினரான மான் இந்த நாட்டுக்கு "தங்க நாடு" என அர்த்தம் தரும் தூவூண்ணபூமி என்ற பெயரைச் சூட்டினர். இமயத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து, திபெத்திய - பரமிய மக்கள் வந்து இங்கு குடியேறினார்கள், தற்போதைய சீனாவின் தென்மேற்குப் பகுதியிலிருந்து தாய் இன மக்கள் இங்கு வந்திறங்கினார்கள். மேடு, பள்ளங்கள் நிறைந்த மியன்மார் நாடு - வெவ்வேறு இனப்பிரிவினர்களைப் பிரித்து வைத்தது. இதுவே எண்ணற்ற இன, மொழிப்பிரிவுகள் பிறக்க வழிசெய்தது.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிய குடியேற்ற நாடாகத் திகழ்ந்த இந்தியாவிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள், இங்கு தங்கள் காற்தடம் பதித்தார்கள். பின்னர்,முழு நாட்டையும் ஆக்கிரமித்தார்கள். 1886 இல் பர்மா என்றழைக்கப்பட்ட மியன்மார், ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்த இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது, கடுமையான போரின் மையமாக இது விளங்கியது. 1942 இல் ஒரு சில மாதங்களில் ஜப்பானியப் படையினர், ஆங்கிலேயரை அங்கிருந்து விரட்டியடித்தார்கள். பின்பு, இகழகத்தக்க "மரண ரயில் பாதை" கட்டப்பட்டது. 400 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த இரும்புப் பாதை, பயணிக்கத் தகுதியற்ற காட்டுப் பாதை, மலைப்பிரதேசங்கள் வழியாகப் போடப்பட்டது. இது பர்மாவிலுள்ள தான்பை யூஸயாட் நகரை, தாய்லாந்திலுள்ள நாங் பிலடுக்குடன் இணைத்தது. உலோகப் பற்றாக்குறையின் காரணமாக மத்திய மலேயாவிலிருந்து (தற்போதைய மலேசியாவிலிருந்து) பெயர்த்தெடுக்கப்பட்ட பெரும்பாலான தண்டவாளங்கள் இங்கு கொண்டுவரப்பட்டன. கட்டுமானத்தின் ஒரு பகுதியான குவை ஆற்றின் மீது கட்டப்பட்ட பாலம், பின்னர் ஒரு பிரபல திரைப்படத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

400 யானைகளைப் பயன்படுத்தி, 300,000 இற்கும் அதிகமான போர்க்கைதிகளும், இந்திய, பர்மிய படைசாரா மக்களும் இந்த இரும்புப் பாதையைக் கட்டிமுடித்தனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

*ஓடிவிளையாடு பாப்பா - நீ*
*ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.*

*மகாகவி பாரதி.*

## நமது நோக்கு

### அவசியத் தேவை

மாவட்டரீதியான, மாகாணரீதியான விளையாட்டுப் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுவது வழமையானது. இவை அவ்வப்போது செய்திகளாக வந்து சென்றுவிடுகின்றன.

ஆனால், இப்போது தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் - சிறுவர்களுக்கான மாவட்ட விளையாட்டுப் போட்டிகளும், தாயகம் தழுவிய விளையாட்டுப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி என்றவுடன், பலரும் இதை அலட்சியமாக நினைக்கக்கூடும். ஆனால், இன்றையநிலையில் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள்- சிறுவர்கள் மத்தியில் ஏற்பாடுசெய்யப்படுவது அவசியமாகின்றது.

கடந்த இரண்டு தசாப்தகால யுத்தத்தின் விளைவாக - எமது சிறுவர்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள், முகங்கொடுத்த பிரச்சினைகள் ஏராளம், ஏராளம்.

போர்ச்சூழலுக்குள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிறுவர்கள் மீது திணிக்கப்பட்ட அரசபடைகளின் யுத்தம் - உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் அவர்களைப் பெரிதும் பாதிக்கவைத்தது.

பாடசாலைகளில் நிம்மதியாகக் கல்விகற்கமுடியாதநிலை - வீடுகளில் நிம்மதியாக உறங்கமுடியாதநிலை - சுதந்திரமாக வீட்டுக்கு வெளியே விளையாடமுடியாதநிலை என்று, பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்ட போர் நெருக்கடிகளை தமிழ்ச் சிறார்கள் எதிர்நோக்கினார்கள்.

இந்த நெருக்கடிகளால் - உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் முழுமையான கவனத்தைச் செலுத்தமுடியாதநிலை ஏற்பட்டது. ஏதோ பாடசாலைக்குச் செல்வது, பரீட்சை எழுதுவது என்று மட்டுமே மாணவர்கள் - குறிப்பாக சிறுவர்களின் நிலை இருக்கிறது.

சற்று வளர்ந்த மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் ஈடுபட வாய்ப்புக்கள் இருந்தபோதும், சிறுவர்களுக்கென ஏதோ வருடத்தில் ஒருமுறை வரும் மெய்வல்லுனர் போட்டியை விட்டால், வேறெந்த விளையாட்டுப் போட்டியும் நடத்தப்படுவதில்லை.

இதனால், இந்த சிறுவர்களின் ஆற்றல், உளப்பாங்கு என்பவற்றை முளையிலேயே கண்டறிந்து- ஊக்குவிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அற்றுப்போகின்றன. வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரகாசிக்கும் ஒருமாணவன், தனது திறமையை வெளிப்படுத்த அடுத்தவருடம்வரை காத்திருக்கவேண்டியிருந்தது.

இடைப்பட்டகாலத்தில் இந்த சிறுவர்களின் ஆற்றல் வளர்த்தெடுக்கப்படாமல் - மழுங்கக்கூடியநிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இப்போது மாவட்ட மட்டத்திலும், தாயகம் தழுவிய ரீதியிலும் அடுத்தமாதம் நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகள் - சிறுவர்களின் உடல், உள முன்னேற்றத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்யுமென நம்பப்படுகின்றது.

உடல், உள ரீதியாக ரீதியாக சிறுவர்களின் ஆற்றல் வளர்த்தெடுக்கப்படுவதன் மூலம் - எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கமுடியும்.

விளையாட்டில் ஆற்றலுள்ள சிறுவர்களை இனங்கண்டு - அவர்களை தேசிய, சர்வதேச மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு, தயார்ப்படுத்துவதற்கு இந்தப் போட்டிகள் மிகவும் பயனுடையதாக அமையும்.

சிறுவயதிலிருந்து மாணவர்களை விளையாட்டு வீரர்களாக உருவாக்குவது அவசியமாகும். இதன் மூலமே சரியான சிறார்களைத் தெரிவு செய்து, வளர்த்தெடுத்து போட்டிகளில் பங்குபற்ற வைக்கமுடியும்.

நாட்டின் ஏனைய பகுதிகளைவிட, வடக்கு - கிழக்கு விளையாட்டு வீரர்களின் பங்களிப்பு தேசிய ரீதியிலேயே மிகக்குறைந்தளவில் இருக்கும்போது - சர்வதேச ரீதியிலான நிலைபற்றி கேட்கவே வேண்டாம்.

இனிமேலும், இத்தகைய நிலை தொடர்ந்து கொண்டிருக்க முடியாது. எமது விளையாட்டு வீரர்களும் - தேசிய, சர்வதேச மட்ட போட்டிகளுக்கு செல்வதற்கான வழிவகைகளைக் கண்டாகவேண்டும்.

இதற்கு, இத்தகைய சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் துணைநிற்குமென நம்பலாம். சிறுவர் விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்லாது - வடக்கிலிருந்து விளையாட்டு வீரர்களை தரம் வாய்ந்தவர்களாக உருவாக்குவதற்கு சகலமுயற்சியும் எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. இதுவே இன்றைய தேவையும்கூட.

# 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு எதிராக 24ம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## சிஹல உறுமய தயாராகின்றது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் பொங்குதமிழ் நிகழ்வுகளை நடாத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்தால், அதற்கெதிராகச் சிஹல உறுமய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று, சிஹல உறுமயவின் ஊடகப்பேச்சாளர் கம்மன்பில - லண்டனில் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும், அவர் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணி எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அனுசரணையுடன, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதற்குப் பலம்பெற்று வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 180 இற்கு மேற்பட்ட சிங்கள உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் ஒருவராவது சிங்களவர் சார்பாகப் பேசமுடியாதுள்ளதாகவும், சிஹல உறுமயவின் பிரதித் தலைவர் எச்.எம்.ஜி.வி. கொட்டகதெனியா லண்டனில் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுவகை வைரஸ் காய்ச்சல்!

(மட்டக்களப்பு)

கடந்த ஓரிரு வாரங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவிவருகிறது. தொடர்ந்து நிலவிவரும் கடுமையான வெப்பம் காரணமாகவே இந்நோய் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதுதவிர - தலையிடி, சளிச்சுரம் போன்ற நோய்களும் வெகுவாகப் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், பலர் போதனா வைத்தியசாலையிலும், மாவட்ட வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவருவதாகவும், சிலர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நல்லைக்குமரன் நூல் வெளியீட்டு விழா இன்று!

நல்லூர் ஆலய திருவிழாவினை முன்னிட்டு, யாழ். மாநகர சபையினரால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் நூல் வெளியீட்டு விழா, இன்று காலை 9.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டில் ஆய்வுரையினை, கோப்பாய் பயிற்சிக் காலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்துவார்.

இந்த நூல் வெளியீட்டுவிழாவில், யாழ்.மாநகர ஆணையாளர், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

# பூநகரிப் பிரதேசத்தில் சட்டவிரோதமான மண், கல் அகழ்வை தடுக்க நடவடிக்கை

(பூநகரி)

பூநகரிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் சட்டவிரோதமாக மண் மற்றும் கல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனால், சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், இத்தகைய பேரழிவைத் தடுப்பதற்கு உரிய அனுமதி பெற்று மணல், கல் அகழ்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

மணல் அகழ்வு குடமுறுட்டி, கௌதாரி முனையிலும், கல் அகழ்வு முழங்காவிலும் மாத்திரம் அனுமதிக்கப்படுகிறது. இவ்விடங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல், கல் ஏற்றுவது சட்டவிரோதமானதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த முதலாம் திகதி முதல் மணல், கல் அகழ்வோர் - அவ்வப்பகுதி கிராம அலுவலரின் ஊடாக பிரதேச செயலாளரின் அனுமதியைப்பெற்று, பிரதேசசபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே - மண், கல் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றது.

மீறிச் சட்டவிரோதமாக மணல், கல் ஏற்வோர்மீது, ரூபா 1000 அபராதம் விதிக்கப்படுவதுடன் - மணல், கல் பறிமுதல் செய்யப்படும் என, பூநகரி பிரதேசசபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## உடவளவையில் வரட்சி காரணமாக நாலாயிரம் ஏக்கர் விளைநிலம் பாதிப்பு!

(கொழும்பு)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடவளைவையில் ஏற்பட்ட கடும் வரட்சியின் காரணமாக, சுமார் நாலாயிரம் ஏக்கர் நிலம் பயிர்ச்செய்கைக்குப் பயன்படாமல் போயுள்ளது.

மேலும், ஏழாயிரம் ஏக்கர் நிலம், சூழல் மாசடைதலுக்கு உள்ளாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதியில் பயிர்ச்செய்கைக்கு உள்ளான கரும்புப்பயிர் - விளைச்சலில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வரட்சி பற்றி கருத்து தெரிவித்த காட்டு இலாகா அதிகாரிகள் தொடர்ந்தும் வரட்சி நிலைத்து நிற்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

## ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்புக் கடன் வசதி!

(கொழும்பு)

நிரந்தரக் குடியிருப்பற்ற ஊடகவியலாளர்கள் - தமது குடியிருப்புக்களை அமைப்பதற்கு, குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபன வங்கி முன்வந்துள்ளது. இது தொடர்பாக, வங்கியின் தலைவர் ஏ.கந்தப்பா கருத்துத் தெரிவிக்கையில் - ஊடகவியலாளர்கள் அனைவரும் இது தொடர்பாக ஒருமித்துக் குரல் கொடுக்கும்போது, அரசிடம் விசேட அனுமதி பெற்று, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இதைவிட, அரச ஊழியர்கள் - வீடமைபபதற்கும் விசேட திட்டம் ஒன்றின் மூலம் இலகுகடன் வசதிகள் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக ஊழியர் போராட்டம் எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது!

## அத்தியாவசிய செயற்பாடுகள் பாதிப்பு

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் போராட்டம்- எட்டாவது நாளாக நேற்று தொடர்ந்து நடைபெற்றது.இவர்களது போராட்டத்தினால் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் யாவும் முடங்கிப்போயுள்ளன. இதனால், வெளிவாரி, உள்வாரி மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறாததினால் - மாணவர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இன்றைய தினத்திலிருந்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஊழியர்களுடன் இணைந்து போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வெளிமாவட்ட மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளுக்கு மட்டுமே குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்படுமெனவும், ஏனைய பகுதிகளுக்கு இன்று முதல் நிறுத்தப்படுமென பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் என்.தங்கராஜா தெரிவித்தார்.

## ஜெயலத் ஜெயவர்த்தனவுக்கு மேலும் ஒரு 'டொக்ரர்' பட்டம்!

(கொழும்பு)

புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டொக்ரர் ஜெயலத் ஜெயவர்த்தனவுக்கு மேலும் ஒரு 'டொக்ரர்' பட்டம் கிடைத்துள்ளது.

ரஷ்யாவிலுள்ள குறூஸ்க் அரச பல்கலைக்கழகத்தினால்- இந்தப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, குறூஸ்க் அரச பல்கலைக்கழகத்தில் பல வருடங்களாக ஆலோசகராக இருந்தார். மொஸ்கோ அரச பல்கலைக்கழகத்திலும், ரஷ்ய வைத்தியக் கல்லூரியிலும் விசேட ஆலோசகராக இருந்தார்.

செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் குறூஸ்க் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், உத்தியோகபூர்வமாக இந்தப் பதவி வழங்கப்படவுள்ளது.

## ஆயுர்வேதம் மூலம் சிறந்த பலன் புள்ளிவிபரங்களிலிருந்து தகவல்!

(கொழும்பு)

ஆயுர்வேத மருந்து வகைகளைப் பாவிப்பதனால் - அதிக நன்மை கிடைத்திருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.


இலங்கையில் 35 வீதமான மக்கள் - ஆயுர்வேத மருந்துகளைப் பாவித்து, தமது நோய்களைக் குணப்படுத்தியுள்ளனர்.

கிராமப்புறங்களிலேயே அதிக அளவில் முன்னர் ஆயுர்வேத மருந்துகள் பாவிக்கப்பட்டிருந்தன. தற்போது, நகரப் புறங்களிலும் ஆயுர்வேத மருந்துகளைப் பாவித்து, மக்கள் தமது நோய்களில் இருந்து குணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சதாமின் மகன்களின் அழிவு எங்கிருந்து ஆரம்பமாகியது?

*(நேற்றைய தொடர்ச்சி.....)*

**எ**து எப்படியோ அமெரிக்கா - ஈராக்குடன் போர் செய்யத் தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், சதாமின் மூன்றாவது வாரிசு நள்ளிரவு ஒன்றில் - ஈராக்கிய விமானப் படை விமானம் ஒன்றின் மூலமாக பக்தாத்தில் தரையிறக்கப்பட்டதாகவும், அமெரிக்கா தாக்குதல் தொடங்



கியபோது, அலீ ஹுசேன் - சதாம் ஹுசேன இருந்த மறைவிடத்திலேயே ஒன்றாக இருந்ததாகவும், சி.ஐ.ஏயிடம் தகவல் இருக்கிறது.

அமெரிக்கப்படைகள் ஈராக்கிய எல்லைக்குள் நுழைந்தபின்னரும், பக்தாத் நகரம் ஒரு சிலநாட்கள் சதாமின் கட்டுப்பாட்டிலிருந்தது. அப்போது சதாமும், உதேயும், ஹுசேயும் ஒரே இடத்தில் இருக்கவில்லை. ஆனால், பக்தாத் நகரம் அமெரிக்கக கட்டுப்பாட்டிற்குள் வரும்போது உதேக்கும், ஹுசேக்கும் இருந்த ஒரேதெரிவு சதாமுடன் நிலத்தடிப் பதுங்குகுழிக்குள் போய் ஒளிந்துகொள்வது.

அதேநேரத்தில், அதே பதுங்குகுழிக்குள் மூன்றாவது வாரிசு அலி ஹுசேனும் இருக்கவே, ஒரு சில தகராறுகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஒருவேளை அதிகாரம் கையை விட்டுப்போனாலும், செல்வம் கையை விட்டுப்போகக் கூடாது என்று, சதாமின் மகன்கள்- ஈராக்கின் முக்கிய வங்கியொன்றிலிருந்து எடுத்துக்கொண்டு போயிருந்த கோடிக்கணக்கான பணமும், இதே பதுங்குகுழிக்குள்தான் இருந்திருக்கிறது.

இப்படியான நேரத்தில் சதாம் தனது முதலிரு மகன்களைக் கையிலிருந்த பணத்தில் பாதியளவு பணத்துடன், நிலத்தடிப் பதுங்குகுழிக்குள் இருந்து வெளியே அனுப்பியிருக்கிறார்.

இது பற்றியும் இரண்டுவிதமாக ஊகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சதாம் ஹுசேன் தனது மூன்றாவது வாரிசுடன் அதிக நெருக்கம் காட்டி, முக்கியத்துவம் கொடுத்தது பிடிக்காததால்தான் - உதேயும், ஹுசேயும் பதுங்குகுழியை விட்டு வெளியேறினார்கள் என்பதும், வெளியேறும் போது பதுங்குகுழியிலிருந்த பாதிப் பணத்தைத் தங்களுடன் எடுத்துச் சென்றார்கள் என்பது முதலாவது ஊகம்.

இரண்டாவது ஊகம் என்ன? சதாம் ஹுசேன் தனது மகன்களை வெளியேற்றினார் என்பது, அவர்கள் மறைவிடத்திலிருந்து வெளியேறுவதற்கு விலையாகத்தான் பாதியளவு பணம் பதுங்குகுழியிலிருந்து அவர்களுடன் வெளியே அனுப்பப்பட்டது என்றும், வெளியேறும் அவர்களுக்குச் சிரியா நாட்டுக்குள் தப்பிச்செல்ல ஏற்பாடுகள் இருப்பதாகக்கூறி நம்ப வைக்கப்பட்டது, என்பதும்தான் இரணடாவது ஊகம்.

சம்பவங்களைப் பார்க்கும்போது- இந்த ஊகங்களுக்குத்தான் சாத்தியம் அதிகம் இருக்கிறது. ஏனென்றால் உதேயும், ஹுசேயும் கொல்லப்பட்ட இடமான மோசொல் இருப்பது, சிரியா நாட்டு எல்லைக்கு மிக அருகில்.

இவர்கள் இருவரும் சிரியா எல்லைப்பக்கம் நோக்கிச்சென்றபோது- எடுத்துச்சென்ற ஏராளமான பணம், எடுத்துச்செல்லப்பட்ட விதம் பற்றிக் கூட சி.ஐ.ஏயிடம் தகவல் உண்டு.

பக்தாத் நகரில் இதுவரை குப்பை கூழங்களை அகற்றும் சாதாரணமான ட்ரக் வண்டியொன்றின் உட்புறமொன்றில், மறைவாக ஒரு பெட்டகம் அமைக்கப்பட்டு, அதற்குள்தான் கட்டுக் கட்டாகப் பணம் இடம்மாறியதாகக் கூறுகிறது சி.ஐ.ஏ.

ஒரு வழியாகச் சிரியா எல்லைக்கு அருகேவரை பிடிபடாமல் சென்றுவிட்ட சதாமின் இருமகன்களும், அவர்களிடமிருந்த பணமும் ஈராக்கின் எல்லையைத் தாண்டமுடியவில்லை.

அந்த அளவுக்குக் காவல் இருந்திருக்கிறது. அதேநேரத்தில் இவர்களுக்குப் பதுங்குகுழிக்குள் வைத்துக் கூறப்பட்டிருந்த - எல்லையைக் கடக்கும் இரகசிய ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

ஈராக்கின் எல்லையைக் கடந்து, சிரியாவுக்குள் நுழையவும் முடியாது. திரும்பி மறுபடியும் பதுங்குகுழிக்குள் மறையவும் முடியாது. உதேக்கும், ஹுசேக்கும் இருந்த ஒரே ஒரு வழி, ஏதோவொரு இடத்தில் போய் ஒளிந்துகொள்வது. அதிலிருந்து சிரியாவுக்குள் நுழையக் காத்திருப்பது. இதற்காக அவர்கள் அவசரகதியில் தேர்ந்தெடுத்த இடம்- சிரியன் எல்லையிலிருந்து 35 மைல் தொலைவிலுள்ள இடம்.

பிலா மாவட்டத்திலுள்ள மோசொல் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்த காரணம் என்ன? அங்கேயிருந்த மிகச் செல்வாக்கான நபர் - சதாமின் ஒரு மைத்துனர் மவான் ஷெய்டான்.

இதனால்தான், சிரியா எல்லைக் கருகில் இருந்த மோசொலில் மொவான் ஷெய்டானின் வீட்டின் கதவை, ஜுலை மாதத்தின் ஒரு திங்கட்கிழமை அதிகாலை, இரண்டு மணிக்குப் போய்த் தட்டியிருக்கிறார்கள் சதாமின் இரு மகன்களும். ஒரு பேரனும், கூடவே ஒரு மெய்க்காவலர் கொஞ்சம் ஆயுதங்களுடனும், ஏராளமான பணத்துடனும்.

உதேயும், ஹுசேயும் அவசரத்தில் செய்த முட்டாள்தனமான முடிவு- ஒளிந்துகொள்வதற்கு மோசோல் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்ததும், அதுவும் - அங்குள்ள அவரது உறவினரின் வீட்டைத் தேர்ந்தெடுத்ததும் தான்.

மோசொல் கொஞ்சம் வித்தியாசமான இடம். பெரியதும் இல்லாமல், மிகச்சிறியதும் இல்லாமல் ஒரு இடைப்பட்ட நகரம். ஈராக்கில் - மற்றைய நகரில் எல்லாம் ஒவ்வொரு இனத்தவர்கள் ஒவ்வொரு பகுதியில் ஒன்றாக வசித்தார்கள். ஆனால், மோசொலில் அது தலைகீழ்.

ஹசாஸ், எராப், குர்திஷ், துர்க்மென் போன்ற இனத்தவர்கள் எல்லோரும் கலந்து வசிப்பார்கள்.

ஒரேதெருவில அடுத்தடுத்த வீடுகளில், வேறுவேறு இனத்தைச் சோந்தவர்கள் இருந்த, கலப்பு இனங்கள் வசித்த நிலைதான் இவர்களது அழிவுக்கு முக்கியகாரணம்.

ஏனென்றால், இவர்கள் ஒளிவதற்காக வந்த செய்தி இலகுவாகக் கசிந்து வெளியே போய்விட்டது. இவர்கள் போய்ச்சேர்ந்த வீடு சதாமின் மைத்துனருக்குச் சொந்தமானது என்றபோதும், அந்த வீட்டைச் சுற்றி வசித்தவர்களில் பலர் குர்திஷ் இனக் குடும்பங்களைச் சேர்ந்தவர்



கள்.

பொதுவாகவே அந்தப் பகுதியில் வசதிக்கும் குர்திஷ் இனக் குடும்பங்கள், குர்திஷ் பற்றியாட்டிக்

**வன்கூவரிலிருந்து**
**ரிஷி**

யூனியன் இயக்கத்தின் தலைவர் ஜலால் தலபானியின் நெருங்கிய ஆதரவாளர்கள்.

ஜலால் தலபானியின் பி.யு.கே சலமா - அமெரிக்காவின் ஆசியுடன் ஈராக்கில் அமைக்கப்பட்டுள்ள அரசமைப்புக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் ஒரு அமைப்பு.

இதனால், அந்த அயலவர்களின் மூலம்தான் உதேயும், ஹுசேயும் நகருக்குள் நுழைந்த விடயம் முதன் முதலில் வெளியே கசிந்து சென்றது.

சதாமின் இரு மகன்களும் மொவான் ஷெய்டானின் வீட்டிற்குள் நுழைந்ததைப் பார்த்த அயலவர்கள், தகவலை ஜலால் தலபானியின் இராணுவத் தலைமையகத்துக்கு நேரடியாக, ஒரு குழுவாகச் சென்று தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

(தொடரும்)

# சுகாதார அறிவுரைகள் மூலம் மாற்றப்பட வேண்டிய மனப்பாங்குகள்

*(நேற்றைய தொடர்ச்சி.....)*

**மா**ரடைப்பு நோயானது ஆரோககியமான உணவுமுறை, உடற்பயிற்சி செய்தல், புகைபிடிக்காமை, மன அழுத்தங்களிலிருந்து விடுபடல், 40 வயதிற்கு மேல் மாரடைப்பு நோய் வரும் சாத்தியம் உடையவர்கள், குருதியின் கொலஸரோல் அளவைப் பரிசோதித்தல் போன்ற முதன்நிலைப் பாதுகாப்பினையும், வைத்தியரின் ஆலோசனைப்படி பெற்ற மருந்துகளை உரியமுறையில் உள்ளெடுத்தல் போன்ற இரண்டாம நிலைப் பாதுகாப்பினையும், மூன்றாம் நிலைப் பாதுகாப்பாக முடியுரு நாடிகளைச் சீரமைத்தல் (**Loranary Angio plasty**), கொழுப்புப் படிவுகளை அகற்றுதல் (**Arthroectomy**), லேசர் நாடி சீரமைத்தல்(**Laser Angio plasty**), பைபாஸ் சத்திரசிகிச்சை (**Bypass Surgery)** போன்றவற்றினை மேற்கொள்ளலாம்.

அடுத்ததாக புற்றுநோயினை எடுத்து நோக்குவோமாயின், புற்றுநோயை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாக - பொரித்த உணவு, தகரத்தில் அடைத்த உணவு, நுண்ணங்கித்தொற்று, சூழற்காரணிகள், புகைத்தல், மது அருந்துதல் ஆகியன அமைகின்றன. நார்ச்சத்து, விற்றமின் **A, E, C** ஆகிய உணவுகளை அதிகளவில் எடுப்பதனால் - இரைப்பைப் புற்றுநோயும், மதுபாவனையைக் குறைப்பதனால் வாய், தொண்டை, களம், ஈரல் ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோயும், பலருடன் பாலுறவுத் தொடர்பு வைத்திருத்தலைத் தவிர்த்தல், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடாமை ஆகிய உயர்ந்த சமுதாயக் கொள்கையைப் பின்பற்றுவதன்மூலம் **Hepatitis B** என்னும் பற்றீரியா, **HIV** வைரஸ் ஆகியவற்றால் ஏற்படும் புற்றுநோயின் நிகழ்தகவைத் தாய்-சேய் நலனில், சுகாதார அறிவுரைகள் பற்றி நோக்குவோம்.

பிரசவிக்கும் தாய்மார்கள் உரிய காலத்தில் **Ante Natal Clinic** இற்குச் சமுகமளித்து - தமது குருதியமுக்கம், குருதி, சிறுநீரின் வெல்லச்செறிவு, சிறுநீர்ப்புரதம் என்பவற்றைச் சோதித்து விற்றமின்கள், இரும்புச்சத்துக் குளிகைகள் உள்ளெடுத்தல் - என்பவற்றின்மூலம் தமது பிரசவகாலத்தில் ஏற்படும் - **Gestational Diabetes**. குரு



தியமுக்கம், குருதிச்சோகை என்பவற்றினால் ஏற்படும் தாக்கத்தினைக் குறைத்துக்கொள்ளலாம்.

அடுத்து சிறு குழந்தைகளை எடுத்து நோக்குவோமாயின், அவர்களுக்கு கூடியளவில் இறப்பை ஏற்படுத்தும் நோய்களாக - வயிற்றோட்டம், நுழையீரல் அழற்சி என்பன முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றன. இதனைத் தடுக்க, குழந்தை பிறந்து ஆறுமாதங்கள்வரை தாய்ப்பால் மட்டும் வழங்குதல், ஆறு மாதங்களின் பின்னர், தாய்ப்பாலுடன் ஏனைய உணவுகளையும் சேர்த்தல், குழந்தைக்கு உரியகாலத்தில் நீர்ப்பீடனம் வழங்குதல், குழந்தையின் வளர்ச்சி தொடர்பில் கவனம் செலுத்துதல் என்பன அமைகின்றன.


உளநோய் ஏற்படுவதனைத் தடுப்பதில் நெருக்கீடுகளைத் தவிர்த்தல் முக்கியமானதாகும். மேலும், உளவளத்துணை வழங்குதல் - மனச்சோர்வின்போதும், தற்கொலை முயற்சியின் போதும் இன்றியமையாததாகும்.

பல தொடர்பாடல்கள்மூலம் பாமர மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் அறிவுரைகளை வழங்கலாம். நாடகங்கள், கதைகள், கவிதைகள் சிறந்த ஊடகங்களாக அமையும். இவை மக்களிடத்தில் ஏற்படுத்தும் விழிப்புணர்ச்சியானது, அவர்களை அநாவசிய வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தலையும் கட்டுப்படுத்த வேண்டும். உதாரணமாக - நவீன தொழில்நுட்பக் கருவிகள்மூலம் (**CT scan , MRI scan** தேவையற்ற பரிசோதனைகளுக்கு உட்படுத்தல்

**சிவசக்தி**
**யாழ். மருத்துவபீடம்**

**VOMIT (Victims Of Modern Imaging Technique)** என ஆங்கில மருத்துவ இதழ (**BMJ**) விபரித்துள்ளது. மருத்துவ வசதி குறைந்த முன்னைய காலத்தல் கோயில்களில் நேர்த்தி வைத்து, தமது நோய்களைக் குணமாக்கிய மக்கள் இன்று பணம் கொடுத்துப் பரிசோதனை செய்கின்றனர், இது வர்த்தக சார்பான மருத்துவத்துறையில் உள்ளோருக்கு ஆதாயமே. ஆனால், பொதுவான சுகாதார அறிவுரையில் இத்தகைய அநாவசிய பரிசோதனைகள் பற்றிய விழிப்புணர்வு அவசியமான ஒன்றாகும்.

# திருத்தப்படாத பாலத்தால் பறிக்கப்பட்ட பரிதாப உயிர்



பாதுகாப்பு அணை உடைந்து வீழ்ந்திருக்கும் மதகுப் பகுதி

**யா**ழ்.குடாநாட்டிலே அநியாய உயிரிழப்புக்கள் அண்மைக்காலமாக வெகுவாக அதிகரித்துள்ளன. போரின்போது பல உயிர்களை இழந்த நாம், தற்போது சமாதான காலத்திலே அர்த்தமற்ற பல வழிகளிலும், பல உயிர்களை இழக்கின்றோம். வீதி விபத்துக்கள், கொலைகள் என இவற்றின் பட்டியல் நீள்கிறது.

இந்த வகையில், நேற்றுமுன்தினம் இரவு கண்டி வீதியும், மவுண் கார்மல் வீதியும் சந்திக்கும் இடத்தில் - அதாவது, குருநகர் தண்ணீர த்தாங்கிக்கு அருகிலுள்ள பாலத்தினுள் சைக்கிளோடு வீழ்ந்து ஆறு பிள்ளைகளின் தந்தையான மனுவல் தோமஸ் (வயது 61) என்பவர் மரணமாகியுள்ளார். இந்தப் பாலத்தின் பாதுகாப்பு அணைகள் உடைந்து வீழ்ந்த நிலையில் சமதரை போன்று காணப்படுகிறது. ஆனால், அதனுள் பாரிய ஒரு மரணக்குழி காத்துக் கிடக்கிறது. இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் முறையிடப்பட்டதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இந்த அநியாய இழப்பை மதகுகளைத் திருத்துவதற்கு பொறுப்பான அரச அதிகாரிகளே பொறுப்பேற்கவேண்டுமெனக் கூறப்படுகிறது. ஏனெனில், இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் இந்தப் பாலத்தினுள் நடந்திருக்கிறது. இதில் வெறும் காயங்களுடன் பலர் தப்பிவிட, இன்று அநியாயமாக ஒரு ஏழைத்தொழிலாளியின் உயிர் பிரிந்திருக்கிறது. இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பல்லவா.

**- சர்வேஸ்**

# இந்திய மத்திய அரசிற்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!



இந்தியாவில், ஆளும் ஜனநாயகக் கூட்டணிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ளன.

தேசிய ஜனநாயக் கூட்டணி அரசின் ஊழல்களை வெளிக்கொணரும் முகமாகவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஊழல் ஒன்றில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தொடர்புபட்டிருந்தார். அதனை விவாதிப்பதே இதன் முக்கிய நோக்கமென எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை, முறியடிக்கப்படுமெனவும், அது அரசை எவ்வகையிலும் பாதிக்காதெனவும், ஆளும் ஜனநாயகக் கூட்டணி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெறாவிட்டாலும், அரசின் ஊழலை வெளிக்கொணருவதே தமது நோக்கமென, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.



பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில், ஆர்ப்பாட்டக்காரர்களால், கார் ஒன்று தீக்கிரையாக்கப்படுவதையும், பாகிஸ்தானியர் ஒருவர் அதனைக் கடந்து செல்வதையும் படத்தில்காணலாம்.

# 'ரொய்ட்டர்' படப்பிடிப்பாளர் ஈராக்கில் உயிரிழந்தார்!



உயிரிழந்த படப்பிடிப்பாளர்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள 'அபுகிரைப்' சிறைச்சாலையில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில், பலஸதீனத்தைச் சேர்ந்த ரொய்ட்டர் செய்திச் சேவை படப்பிடிப்பாளரான மேஷன் டனாஸ் (வயது 43) உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

புகைப்படக்கருவியுடன் நின்ற பத்திரிகையாளரை - தம்மீது தாக்குதல் நடத்த ஆயுதத்துடன் நிற்கும் தீவிரவாதி எனக் கருதிய அமெரிக்கப் படையினர், தாக்குதல் நடத்தியதில் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் சேர்த்து, ஈராக்கியப் போரில் இதுவரை 19 பத்திரிகையாளர்கள் மரணமடைந்துள்ளதாகத் அறிவிக்கப்படுகிறது.

அத்துடன். ஈராக்கில் கொல்லப்பட்ட ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் இரண்டாவது பத்திரிகையாளர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்தில், 6 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# லைபீரியாவில் இடைக்கால அரசு ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கை



லைபீரியாவின் புதிய ஜனாதிபதி "மோசவ் பிலா"விற்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையே கானாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த நிலையில், ஜனாதிபதி நாடுதிரும்பியிருந்தார்.

புதிதாக அமைக்கப்படும் அரசில் தமக்கு உப ஜனாதிபதி பதவி தரப்படவேண்டும் எனப் போராளிகள் கேட்டிருந்ததால், பேச்சுவார்த்தை முறிவடைந்திருந்தது.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் லைபீரிய பிரதிநிதி "யாகுயஷ் கெலின்" இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்கான உடன்பாடு ஒன்றில் போராளிக் குழுக்கள் கையெழுத்திடவேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, போராளிக் குழுக்கள் தமது முன்னைய நிபந்தனைகளைக் கைவிட்டுப் பேச்சுக்கு ஒப்புக்கொண்டனர்.

போராளிகள் சரியான முடிவைத் தெரிவிக்காதுவிட்டால் தாமும் பேச்சுவார்த்தையில் இருந்து விலகப் போவதாக, மேற்கு ஆபிரிக்காவிற்கு, நடுவர்களாகப் பங்கேற்றிருப்பவர்களும், அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கென்யாவில் நடத்தப்படும் பேச்சுக்கள் மூலம், ஒக்ரோபரில் ஒரு இடைக்கால அரசை ஏற்படுத்தி, இரண்டு ஆண்டுகளில், நாட்டை ஜனநாயக ஆட்சிமுறைக்கு மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலகவலம்

# பயங்கரவாத அச்சுறுத்தல்; 10 ஆவது நாடாக பிரிட்டன்!



பிரிட்டிஷ் நாடாளுமன்றம்.

பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளாகக்கூடிய 10 ஆவது நாடாக பிரிட்டன் உள்ளதாக, கணிப்பீடுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன், பிரிட்டன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதும், ஈராக்குடனான போரில் பங்குகொண்டமையும் இதற்கான முக்கிய காரணமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரிட்டன் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தொடர்பு மையமாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ரஷ்யா, லைபீரியா, யேமன், லெபனான் ஆகிய நாடுகளைவிட, கூடுதலான பயங்கரவாதத் தாக்குதல் ஆபத்துக்களைப் பிரிட்டன் எதிர்நோக்குவதாக, ஆய்வு மையமொன்று நடத்திய கணிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

தீவிரவாதிகளின் முக்கியமான இலக்காக பிரிட்டிஷ் நாடாளுமன்றம், கருதப்படுகின்றது.

### இரும்புப் பெட்டிக்குள் 2 நாள் சிசு கண்டெடுப்பு!

ஈராக்கின் பஸ்ரா நகரில், பிரிட்டிஷ் படையினர் இருவர், வீடு ஒன்றைச் சுற்றிவளைத்து - சந்தேகத்துக்கிடமான ஐவரைக் கைது செய்யசென்றபோது, இரும்புப்பெட்டி ஒன்றினுள் ஆயுதங்கள் மத்தியில் பிறந்து இரண்டு நாட்களேயான சிசுவொன்றை கண்டுபிடித்து காப்பாற்றியுள்ளனர்

# மக்களுக்கு பதிலாக என்னைக் கடத்துங்கள் என்கின்றார் உகண்டா ஜனாதிபதி ஜொவேரி!



உகண்டாவில், தீவிரவாதக் குழு ஒன்றினால் 13 சிறுவர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து - அரச படைகளுடன் கலந்தாலோசிப்பதற்காக, அந்நாட்டு ஜனாதிபதி ஜொவேரி முசவெனி, கூட்டம் ஒன்றினை கடந்த சனிக்கிழமை சொரொரி என்ற இடத்தில் நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர் - பொதுமக்களைக் கடத்துவதற்குப் பதிலாக, தன்னைக் கடத்திச் செல்லுமாறு தீவிரவாதிகளைக் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டம் நடைபெற்ற பின்னர் - சொரொரி என்ற இடத்திலிருந்து 10 மைல்களுக்கு அப்பால் மீண்டும் தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் - ஐவர் கொல்லப்பட்டனர், 10 பேர்வரை கடத்தப்பட்டனர்.

ஜனாதிபதி ஜொவெரி முசவெனியைப் பதவியிலிருந்து நீக்குவதற்காக - 1980 ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களுக்கு எதிராக வன்முறைத் தாக்குதல்களை தீவிரவாதிகள் நடத்தி வருகின்றனர்.

தீவிரவாதிகளுக்கு எதிராக அரசினால் போராடமுடியாதுள்ளதாகவும, தீவிரவாதிகள் மறைந்திருக்கும் பகுதிகளுக்குச் செல்வதற்கு - அரச படைகள் அச்சம் கொண்டுள்ளதாகவும் உகண்டா மக்கள் தெரிவிக்கின்றனர்.



ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில், உடைக்கப்பட்ட நீர்விநியோகக் குழாயில் இருந்து வெளியேறும் நீரில், வெப்பம் தணிய குளித்து மகிழும் சிறுவர்களை படத்தில் காணலாம்.


## தென்னாபிரிக்காவுக்கு எதிரான

# மூன்றாவது டெஸ்ட் போட்டி; இங்கிலாந்து அபார வெற்றி!

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இறுதிநாளான நேற்று, இங்கிலாந்து அணி அபாரமாக ஆடி, 70 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியைத் தோற்கடித்தது.

நாணயச் சூழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 445 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அனி, தனது தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 362 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, 118 ஓட்டங்களை மட்டும் பெற்று, முழு விக்கெட்டுக்களையும் இழந்தது. 208 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, தனது முதலாவது டெஸ்டிலேயே மிக அபாரமாகப் பந்துவீசிய ஜேம்ஸ் கோட்லி 34 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களைச் சரிக்க, தென்னாபிரிக்க 131 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களால் இங்கிலாந்திடம் தோல்வி கண்டது. நடைபெற்றுமுடிந்த மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் சமநிலையில் காணப்பட்டன. ஆட்ட நாயகனாக ஜேம்ஸ் கோட்லி தெரிவுசெய்யப்பட்டார்.



விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில், ஆட்ட நாயகன் ஜேம்ஸ் கோட்லி

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம்களை பாதுகாப்பதற்கு தவறினால் அரசிற்கான ஆதரவை வாபஸ் பெறுவோம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் எச்சரிக்கை

முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில், அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று நினைக்கின்றோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம்களின் பாதுகாப்புப் பற்றி அரசுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கின்றோம். இதை அரசு சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. இவ்வாறு முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் - நாங்கள் நாடாளுமன்றில் அங்கம் வகிப்பதோ அல்லது அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதோ - முஸ்லிம் மக்களுக்கு எம் மீது இருக்கும் நம்பிக்கையை இழக்கசெய்துவிடும்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்கில் பங்குகொண்ட பொதுமக்கள் - நீங்கள் இன்னும் ஏன் அரசோடு ஒட்டியிருக்கிறீர்கள் என்று கேள்வியெழுப்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

# சிவசக்தி ஆனந்தனை தாக்கிய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்!

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக - சந்தேகத்தின் பேரில் ஒருவரை, தமிழீழ காவல் துறையினர் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா சேமமடு என்ற பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டிருந்தவேளை, இவர் உருக்கு நாற்காலியினால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மேலும் ஒன்பது மாணவர்கள் மருத்துவபீட அனுமதிகோரி வழக்கு

(கொழும்பு)

'இசற்' ஸ்கோர் முறையில் - பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படாததால் - பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்பது பேர், தமக்கு மருத்துவபீட அனுமதி பெற்றுத்தருமாறு கோரி, மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, உயர் புள்ளிகளைப் பெற்றபோதிலும், 'இசற்' ஸ்கோர் முறையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படாமையினால், தாம் பாதிப்படைந்துள்ளதாக நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் - அவர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கில் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆணையாளரை பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்

ஏற்கனவே 17 மாணவர்கள், மேற்படி பல்கலைக்கழக தெரிவு முறையால் தாம் பாதிக்கப்பட்டதாக - கொழும்பு நீதிமன்றில் அடிப்படை மனிதஉரிமை வழக்கு தாக்கல் செய்து, அவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியினை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# அமைச்சர் ராஜித சேனாரட்ன மீதான கொலை முயற்சி முறியடிக்கப்பட்டது!

(கொழும்பு)

அமைச்சர் ராஜித சேனாரத்ன மீதான கொலை முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகைச் சேர்ந்த குழுவினரால் மேற்கொள்ளப்பட இருந்ததாகக் கூறப்படும் கொலை முயற்சியே - குற்றப்புலனாய்வுத்துறையினரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் இருந்த ஒருவர் - வெளியில் இருந்த வேறொருவருக்கு ராஜித சேனாரத்னவைக் கொலை செய்யும்படி உத்தரவை வழங்கியிருப்பதாக அறியவருகின்றது.

இந்தவிடயம் சிறைக்குள் வெளிவரவே, கொலை முயற்சி தொடர்பான விடயத்தை முறியடிக்கக் கூடியதாக இருந்தது என, குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்துத் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்திவருகின்ற குற்றப்புலனாய்வுத்துறையினர், மேற்படி கொலை முயற்சிக்கான காரணம்-காணிப் பிரச்சினை சம்பந்தமானதாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# பழக்கடையில் வேலைசெய்த சிறுவனைக் காணவில்லை!

## தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பழக்கடை ஒன்றில் வேலைசெய்யும் சிறுவன் ஒருவனை, கடந்த 12 ஆம் திகதிமுதல் காணவில்லை என, தாயாரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி கொட்டடியைச் சேர்ந்த சேகர் ஸ்ரீதரன் (வயது 15) என்பவரே காணாமல் போயுள்ளவர் ஆவார். வீட்டில் தந்தையாரோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, இரவு நேரத்தில் வீட்டைவிட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைக்குச் சென்று வந்த இந்தச் சிறுவன் - பழக்கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்ததால், தன் பாடசாலைப் படிப்பை இடைநிறுத்தினான் எனவும் தெரியவருகிறது.

### புலிகள்....

கிளிநொச்சியிலிருந்து பிரான்ஸிற்கான பயணத்தை ஆரம்பிக்கிறது.

இக்குழுவில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன், பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

### நோர்வே....

மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் - இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றியும், அகதிகளை மீளக்குடியமர்த்துவதில் உள்ள சிக்கல், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு உள்ளது, என்பன குறித்தும் அவர்கள் ஆராய்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

### வெளிநாட்டு....

பிற்போடுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை -

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தத்தமது சின்னங்களில் போட்டியிடும் வேட்பாளர்களை, வேட்புமனுச் செய்யும்படி கோரியுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் - மாகாணசபைகளைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்த ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையில், மாகாணசபைத் தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் எண்ணங்களை நாடி பிடித்துப் பார்க்கும் முயற்சியில் ஜனாதிபதி இறங்கியுள்ளதாகவும்,

இம்முயற்சியில் தன் கட்சிக்கு சாதகமான நிலை ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் - பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்து வருவதாகவும், அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# யாழ்.குடாநாட்டில் தொடர்ந்தும் சில தினங்களுக்கு மழை பெய்யும்!

யாழ்.குடாநாட்டில் திடீர் திடீரென இடியுடன்கூடிய மழை பெய்யுமென, வளிமண்டல அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக - குடாநாட்டில் திடீர் திடீரென அதிகளவான மழை பெய்து வருகின்றது. நேற்றையதினம் மட்டும் 29.0 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக பதிவாகியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதிமுதல் நேற்றிரவு வரை 118.3 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக வளிமண்டல அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

# கருவேலவனின் வித்துடல் முள்ளியவளையில் விதைப்பு

கடந்த வியாழக்கிழமையன்று, சுகவீனம் காரணமாகச் சாவடைந்த மேஜர் கருவேலவனின் வித்துடல் -முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் விதைக்கப்பட்டது.

இந்த மாவீரனது வித்துடல், நேற்று அவரது இல்லத்திலிருந்து காலை 10 மணிக்கு ஊர்திப்பவனியாக எடுத்துவரப்பட்டு, புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் வீரவணக்கக்கூட்டம் இடம் பெற்றது.

இந்த வீரவணக்கக் கூட்டத்தில், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், காவற்துறை நடுவப்பணியக மேற்பார்வையாளர் மாதவன், புதுக்குடியிருப்பு பிரதேச தமிழீழ தேசிய எழுச்சிக்குழுத் தலைவர் ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்தினர்.

காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் இயலரசன் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார். பின்னர் வித்துடல் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (17)

### சம்மாந்துறையில்....

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து, பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று, சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள, சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்திர டி சில்வா, விசேட அதிரடிப்படை உதவிப் பொலிஸ் அதிகாரி நிமால் லூகே, கிழக்கு மாகாண பொலிஸ் அத்தியட்சகர் நெவில் விஜயசிங்க, இராணுவ கேணல் தவுலகல ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அம்பாறையில் ஹர்த்தால்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் - நேற்று முன்தினம் இரவு முஸ்லிம்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக , நேற்று மதியம் முதல் ஹர்த்தால் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.21 | 156.65 |
| 1 யூரோ | 109.57 | 110.90 |
| 1 சுவிஸ் பிராங் | 70.90 | 72.40 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 67.28 | 63.52 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.90 | 25.90 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.